07.08.2026

PW.1 முத்துமாரி

MCOP. No. 2706/2024 (MCOP. 2707/2024)

CNR.No.TNMD0C-000178-2025 and CNR.No.TNMD0C-000180-2025

ம.சா.1 கடந்த 23.07.2026 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட பின்பு,

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் இன்று குறுக்கு விசாரணை :**

1. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனம் ஒட்டி சென்றேன் என்றால் ஆமாம். நான் விபத்து சமயத்தில் அருப்புக்கோட்டையில் இருந்து மதுரை நோக்கி வந்து கொண்டிருந்தேன். மேற்படி சாலையானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்கிறது. என் மீது இடித்ததாக சொல்லக்கூடிய வாகனம் எந்த திசையில் இருந்து வந்தது என்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. மேற்படி வாகனமானது தவறான திசையில் வந்தது. மேற்படி வாகனம் தவறான திசையில் வந்தது என்பதை காட்டுவதற்கு போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

2. விபத்து நடந்த உடன் காவல் நிலையத்தில் புகார் ஏன் கொடுக்கவில்லை என்றால் மருத்துவமனைக்கு சென்று விட்டோம் ஆகையால் காலதாமதம் ஆகிவிட்டது. விபத்து நடந்த உடன் முதன்முதலில் எந்த மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் பிரீத்தி மருத்துவமனைக்கு சென்றேன். ப்ரீத்தி மருத்துவமனையில் விபத்து பதிவேடு அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் மற்றும் மருத்துவ பில்களை பொறுத்து மேற்படி மருத்துவமனை நிர்வாகத்தினரை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் ஆமாம்.

3. என் மீது மோதியதாக சொல்லக்கூடிய வாகனம் வடக்கு திசையில் இருந்து தெற்கு திசை நோக்கி எதிரே வந்தது. என் மீது மோதியதாக சொல்லக் கூடிய வாகனம் கம்பெனியிலிருந்து இறங்கும்போது விபத்து ஏற்பட்டதா என்றால் கம்பெனியில் இருந்து வந்து இடது பக்கம் திரும்புவதற்கு பதிலாக வலது பக்கம் திரும்பி தவறான திசைக்கு வந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது. நான் சொன்ன

மாதிரி விபத்து நடந்தது என்பதை காட்டுவதற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அருகே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் பில்டிங் காண்ட்ராக்ட் தொழில் செய்து வந்தேன்.

4. நான் மேற்படி தொழில் செய்து வந்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுவதும் குணமாகிவிட்டது என்றும் எனக்கு இந்த விபத்தினால் எந்த நிரந்தர ஊனமோ வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் எந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தாரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

A MUTHU ESAKKI

Digitally signed by A MUTHU ESAKKI
Date: 2026.08.07 18:42:20 +0530

நான்காம் கூடுதல் சார்பு நீதிபதி,

மதுரை.

07.08.2026

PW.2 பாலமுருகன்

MCOP. No. 2706/2024 (MCOP. 2707/2024)

CNR.No.TNMD0C-000178-2025 and CNR.No.TNMD0C-000180-2025

**ம.சா.2 கடந்த 23.07.2026 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, ம.சா.ஆ.8 முதல் ம.சா.ஆ 16 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு, கீழ் கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது.**

Ex.P.17 - **மனுதாரரின் கடவுச்சீட்டு - நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)**

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் இன்று குறுக்கு விசாரணை :**

**1. நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றேன் மேற்படி வாகனத்தை எனது மாமா முத்துமாரி ஓட்டி வந்தார். விபத்தானது காலை 8.20 மணியளவில் நடந்தது. விபத்தில் எங்களை இடித்ததாக சொல்லக்கூடிய வாகனம் எங்கிருந்து வந்தது என்றால் வடகிழக்கில் இருந்து வந்து மேற்கு நோக்கி சென்றது. நாங்கள் எங்கிருந்து வந்தோம் என்றால் மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி சென்றோம். இரண்டு வாகனங்களுக்கும் முன்பக்கத்தில் சேதம் ஏற்பட்டதா என்றால் எங்கள் வண்டிக்கு மட்டும் முன்பக்கத்தில் சேதம் அந்த வண்டிக்கு சேதம் இல்லை.**

**2. எனது மாமா கொஞ்சம் நிதானமாக சென்று இருந்தால் இந்த விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் மேற்படி வாகனமானது தவறான திசையில் திடீரென்று வந்துவிட்டது. நான் விபத்திற்கு முன்பாக மாலத்தீவில் வேலை செய்து கொண்டிருந்தேன். எனது சம்பளமானது வங்கி கணக்கு மூலமாகத்தான் பெறப்படும் என்றால் ஆமாம். மேற்படி வங்கி கணக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ம.சா.ஆ. 16 முறையான ஆவணம் இல்லை என்றும், அது நகல் ஆகும் மேலும் அது முறையாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேலும் மேற்படி ஆவணமானது முறையான நகல் இல்லை என்றால் சரியல்ல.**

**3. ம.சா.ஆ. 16 என்னுடைய ஒர்க் பர்மிட் என்றால் ஆமாம் அது எப்பொழுது முடிந்து உள்ளது என்றால் பிப்ரவரி மாதம் 2020 ஆம் ஆண்டு முடிந்துள்ளது. மேற்படி 2020 ஆம் ஆண்டில் இருந்து விபத்து நடந்த 2024 ஆம் ஆண்டு வரை நான் ஒர்க் பெர்மிட்டை புதுப்பித்துள்ளேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் கடவுச்சீட்டை தாக்கல் செய்துள்ளேன் மேலும் 2023 ஆம் வருடம்**

வரை ஓர்க் பெர்மிட்டும் உள்ளது அது என்னிடம் உள்ளது நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். நான் மாலத்தீவில் ஓட்டுனராக பணிபுரிந்தேன் என்று சொல்லி ம.சா.ஆ. 15 தாக்கல் செய்துள்ளேன் மேற்படி ஆவணம் 2022 ஆம் ஆண்டு முடிவடைந்து விட்டது அதை புதுப்பித்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

4. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 13, 2025 ஆம் ஆண்டுக்கு பின்னர் மாலத்தீவு செல்வதற்கான எடுக்கப்பட்டது என்றால் ஆமாம். எப்பொழுது திரும்ப நான் மாலத்தீவிற்கு செல்கிறேன் என்றால் 11.08.2026 ஆம் வருடம் போவதற்கு ஆயத்தமாக பணி செய்துள்ளேன். விபத்து நடந்து ஆறு மாதம் கழித்து நான் மாலத்தீவிற்கு சென்று உள்ளேன் என்றால் ஆமாம் அது என்னுடைய பொருட்களை எடுப்பதற்காக சென்றேன். தற்பொழுது எனது கம்பெனியில் என்ன சம்பளம் தருவதாக சொல்லி உள்ளார்கள் என்றால் ஏற்கனவே நான் வாங்கிய சம்பளத்தை தருவதாக சொல்லி உள்ளார்கள்.

5. விபத்திற்கு முன்பே நான் எந்த வேலையும் செய்யாமல் தான் இருந்தேன் என்றும், இந்த விபத்தினால் எனக்கு எந்தவித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான ம.சா.ஆ. 13 முதல் ம.சா.ஆ. 16 வரையிலான விவரங்களை பொறுத்து சம்பந்தப்பட்ட நபர்களை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் மற்றும் மருத்துவ பில்களை பொறுத்து சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகத்தினரை வரவழைத்து விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான்.

6. நான் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரையும் காப்பீடு நிறுவனத்தினரை ஒரு தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது மாமாவின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் அவர்தான் எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகமானவை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தாரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

A MUTHU ESAKKI

Digitally signed by A MUTHU ESAKKI
Date: 2026.08.07 18:42:27 +0530

நான்காம் கூடுதல் சார்பு நீதிபதி,

மதுரை.